இந்துஸ்தானும்
“ஸ்தான்” நாடுகளும்

உலகில் இறையாண்மை ஆட்சி கொண்ட **195 நாடுகள்** உள்ளன. இவற்றில் சுமார் **110-க்கும் மேற்பட்ட நாடுகள்** ஏதேனும் ஒரு வகையான ஜனநாயக தேர்தல் முறையைப் பின்பற்றி வருகின்றன. இவற்றுள் மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட, தேர்தல் முறையில் ஆட்சி நடைபெறும் நாடுகள் மூன்று. அமெரிக்காவைப் போல் 4 மடங்கு சுமார் **145 கோடி** மக்கள் தொகை கொண்ட **இந்தியா** உலகின் **மிகப்பெரிய ஜனநாயக நாடு** ஆகும். இந்தியாவிற்கு அடுத்து, சுமார் **141 கோடி** மக்கள் தொகை கொண்டுள்ள **சீனா** ஒரு கம்யூனிச ஆட்சி நடைபெறும் தேசமாகும்.

நமது **பாரத தேசம்! பழம் பெரும் தேசம்!** இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் **"இந்தியா எனும் பாரதம்"** என்று உள்ளது. பண்டைய பாரசீக (Persian) மொழியில் **"இந்தியாவின் பெயர் இந்துஸ்தான்"** என்பதாகும். இந்துஸ்தான் என்ற பெயரைப் போன்றே, கிர்கிஸ்தான் கசகஸ்தான் அசர்பைஸ்தான் துர்க்மெனிஸ்தான் ஆப்கானிஸ்தான் உஷ்பெக்கிஸ்தான் பலுக்கிஸ்தான் என்று பெயரில் நாடுகள் உள்ளன. இந்துஸ்தான் என்ற பெயர் **"இந்து+ஸ்தான்"** என்ற இரண்டு பெயர்ச் சொற்களின் கூட்டுப் பெயராகும்.

வடமொழியில் **"ஸ்தானம்"** என்றால் இடம் என்று பொருள். "ஸ்தான்" என்ற சொல் நாட்டைக் குறிக்கிறது. பாரசீக (Persian) மொழியில் **"ஸ்தான்"** என்றால் **"நிலம்"** அல்லது **"வாழிடம்"** (Place of / Land of) என்று பொருள். "ஸ்தான்" என்று முடியும் 7 முக்கிய நாடுகள்:

1) **ஆப்கானிஸ்தான் (Afghanistan):** ஆப்கானியர்களின் நிலம்.

2) **கசகஸ்தான் (Kazakhstan):** கசாக் இன மக்களின் நிலம் (பரப்பளவில் உலகின் மிகப்பெரிய 'ஸ்தான்' நாடு).

3) **கிர்கிஸ்தான் (Kyrgyzstan):** கிர்கிஸ் இன மக்களின் நிலம்.

4) **உஸ்பெகிஸ்தான் (Uzbekistan):** உஸ்பெக் இன மக்களின் நிலம்.

5) **துர்க்மெனிஸ்தான் (Turkmenistan):** துர்க்மென் இன மக்களின் நிலம்.

6) **தஜிகிஸ்தான் (Tajikistan):** தஜிக் இன மக்களின் நிலம்.

7) **பாகிஸ்தான் (Pakistan):** 'பாக்' என்றால் உருது மொழியில் 'தூய்மையான' என்று பொருள். தூய்மையானவர்களின் நிலம்.

8) அசர்பைஸ்தான் நாட்டின் துல்லியமான பெயர் **அசர்பைஜான் (Azerbaijan)** என்பதாகும். இதுவும் மத்திய ஆசிய/காஸ்பியன் கடல் பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடு ஆகும்.

இவற்றுடன் இன்னும் சில "ஸ்தான்"கள் உள்ளன. அவை, தனி நாடுகளாக இல்லாவிட்டாலும், பிற நாடுகளுக்குள் மாநிலங்களாகவோ அல்லது தன்னாட்சிப் பிரதேசங்களாகவோ உள்ளன.

1) **பலுசிஸ்தான் (Balochistan):** பாகிஸ்தான் மற்றும் ஈரானின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பலூச் இன மக்களின் நிலம்.

2) **குர்திஸ்தான் (Kurdistan):** ஈராக், ஈரான், துருக்கி மற்றும் சிரியா எல்லைகளில் குர்து இன மக்கள் வாழும் வரலாற்றுப் பகுதி.

3) **அரேபியா மற்றும் பிற பாரசீகப் பெயர் மரபுகள்:** வரலாற்று ரீதியாக அரபு நாட்டைப் பாரசீக மொழியில்' **அரபிஸ்தான்' (Arabistan)** என்றும், ஹங்கேரியை **'அங்கேரிஸ்தான்' (Angaristan)** என்றும் அழைக்கும் மரபும் உண்டு.

4) மேற்கண்ட 12 “ஸ்தான்” நாடுகளைப் போன்று, இமயத்தின் தெற்கேயுள்ள தேசம் “இந்துஸ்தான்” என்று அழைக்கப்பட்டுள்ளது.

இந்து-ஸ்தான் – “இந்து” இன மக்களின் நிலம்.

இமயத்திற்குத் தெற்கேயுள்ள பாரத நாட்டைப் பாண்டவர்களும், இமயத்தின் மேற்கேயுள்ள காந்தாரம் முதலான நாடுகளைக் கௌரவர்களும் ஆட்சி செய்தனர் என்று மகாபாரதம் குறிப்பிடுகிறது.

இந்துஸ்தானில் வாழ்ந்த “இந்து” மக்கள் யார்? அவர்களுக்கு “இந்து” என்ற பெயர் எப்படி வந்தது? யார் வைத்த பெயர் இது?

ü **"வானவர் வணங்கும் மாபெரும் பூமி”** என்று சிறப்பித்துப் பாடுகிறார் இளங்கோவடிகள் *(கால்கோள் காதை, பாடல் வரிஎண் - 220)*

ü *கடலுக்கு வடக்கிலும், இமயமலைக்குத் தெற்கிலும் அமைந்துள்ள நிலப்பரப்பு எதுவோ, அதுவே 'பாரத வர்ஷம்' எனப்படும். இது* **"தேவ நிர்மிதம் தேசம்"** ஆகும். அதாவது, இந்த நிலப்பரப்பு சாதாரண மனிதர்களால் எல்லையிடப்பட்டது அல்ல, இது **"தேவர்களால் நிர்மாணம் செய்யப்பட்ட ஒரு புனித பூமி"** (A land fashioned by the Gods) என்று விஷ்ணு புராணம் தெளிவாகப் பிரகடனம் செய்கிறது.

இந்து-ஸ்தான் இது இந்துக்களின் நாடு.

அன்பன்
காசிஸ்ரீ முனைவர் கி. காளைராசன்
மேனாள் துணைப் பதிவாளர்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
kalairajan26@gmail.com, WhatsApp : +91 943501912
பராபவ வைகாசி 23 (06.06.2026) சனிக்கிழமை